# பாண்டியன் – வெற்றிக்கதை



என் பெயர் பாண்டியன். 50 வயது விவசாய குடும்பத்தை சேர்ந்தவன். நான் பட்டதாரியாக இருந்தாலும் விவசாயத்தில் முழுமையாக என்னை இணைத்துக் கொண்டேன். எனக்கு 35 ஏக்கர் நன்செய் நிலமும் 40 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளது. அதில் நெல், தென்னை, எண்ணெய் பனை போன்ற பயிர்களை பயிர் செய்து வருகிறேன். தென்னை 20 ஏக்கரில் இயற்கை முறையில் பயிர் செய்துள்ளேன்.

எதையாவது சாதிக்க வேண்டும் என்கிற உந்து சக்தி எனக்கு. அதனால் புதுமையான தேசிய எண்ணெய் பனை ஆராய்ச்சி நிலையம் பெதவகி ஆந்திராவின் மூலம் செயல் படுத்தப்பட்டு வரும் எண்ணெய் பனை ரகத்தேர்வு ஆராய்ச்சியில் கலந்து கொண்டு ஆராய்ச்சிக்கு உதவி புரிகிறேன். தமிழ்நாட்டில் என் தோட்டத்தில் மட்டுமே இந்த ஆராய்ச்சி நடந்து வருகிறது என்பது எனக்கு கூடுதல் சிறப்பு.

தற்போது 20 ஏக்கரில் தென்னை சுமார் 1000 மரங்கள் உள்ளன. இயற்கை முறையில் மட்டுமே விவசாயம் செய்து வருகிறேன். இதுவரை எந்த வித இரசாயன உரங்கள் இட்டதில்லை. விளை வித்த தேங்காய்களை பட்டுக்கோட்டை, மன்னார்குடியிலிருந்து வரும் மொத்த வியாபாரிகள் சொல்லும் விலைக்கு இது வரை விற்று வந்தேன்.கும்பகோணம் சந்தை பகுப்பாய்வாளர் மூலம் தினசரி நிலவரங்களை தரும் எஸ்.எம்.எஸ் சேவையை அறிந்து எண்னையும் பதிவு செய்து கொண்டேன். கும்பகோணம் மற்றும் திருச்சி சந்தை நிலவரங்களை அன்றாடம் அறிந்து வருகிறேன். எனது மகன் இன்டெர்னெட் வசதியை வெளியூர் செல்லும் போது பயன்படுத்துவான். அதன் மூலம் விலை நிலவரங்களை டி.எம்.ஐ சேவை மூலம் அறிந்து கொள்வேன்.

தினசரி விலை என்ன என்று நான் தெரிந்து கொள்வதே எனக்கு சிரமமாக இருந்தது. இதற்கு முன்பு அக்கம் பக்கத்து விவசாயிகளுக்கு உள்ள கொள்முதல் விலையை கேட்டு தெரிந்து கொள்வேன். தற்போது அந்த பிரச்சனை இல்லை நான் பல பேருக்கு விலை நிலவரங்களை சொல்லி வருகிறேன். அது மட்டுமல்லாமல் கூடுதலான விலைக்கு எடுத்து செல்ல நிர்பந்திக்கிறேன். வியாபாரி சொன்ன விலைக்கு விற்ற காலம் போய் எனது தேங்காய்க்கு

கூடுதலாக விலை கிடைக்கிறது. காய் ஒன்றிற்கு குறைந்தது 50 பைசா வரை கூடுதலாக கிடைக்கிறது. கண்டிப்பாக எனது வருமானம் கூடியிருப்பது கண்கூடாக தெரிகிறது.

விவசாய கருத்தரங்குகளில் விளம்பரங்கள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் மூலம் இதன் பயனை அனைத்து விவசாயிகளுக்கும் எடுத்துச் செல்ல முடியும். இது போன்ற சேவையை இதற்கு முன் நான் பயன்படுத்தியது இல்லை. கண்டிப்பாக செய்தி தமிழில் இருந்தால் அனைவரும் பயன்படுத்த வசதியாக இருக்கும். எனக்கு ஆங்கிலத்தில் சந்தை நிலவரம் வருவது பற்றி பிரச்சனை இல்லை. ஆனால் என்னை சார்ந்த சாதாரன விவசாயிகளால் புரிந்து கொள்வது மிகவும் சிரமமாக இருக்கும். எனவே தமிழில் இருந்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பொதுவாக இது போன்ற சேவைகளை தமிமழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலம் இலவசமாக பெருவதையே நானோ அல்லது என் போன்ற விவசாயிகளோ விரும்புகிறோம்.

இயற்கையாக விளைந்த காய்களை சந்தையில் விற்பதை விட தமிமழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் எங்களிடம் இருந்து கொள்முதல் செய்து ஒவ்வொரு ஊரிலும் விற்பனை நிலையத்தை திறந்து என் போன்ற விவசாயிகளுக்கு மேலும் லாபத்தை எட்ட உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சி. பாண்டியன்,

த.பெ. சிவாநந்தம்,

முன்னோடி விவசாயி,

மெயின் ரோடு, பேரையூர்,

மன்னார்குடி (தாலுக்கா)

அலைபேசி: 09443114353